# <u>சிதம்பரம் நகராட்சி</u>



## 2018 ம் ஆண்டு ஆடி திங்கள் 25–ம் நாள் 10.08.2018 வெள்ளிகிழமை காலை 10.30 மணியளவில் நடைபெறும் சாதாரண நகர்மன்ற கூட்டம் நடைபெறும்

## மன்றக்கூட்டப் பொருள்

**1)** சிதம்பரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் 1896ம் ஆண்டு முதல் 1959ம் ஆண்டு முடிய பிறப்பு இறப்பு பதிவுகள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படாமல் உள்ளது. மேற்படி ஆண்டுகளில் தோராயமான 85000 பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். மேற்கண்ட பணியை தனியார் வசம் ஒப்படைக்கவும் அதற்கான தோராய செலவினம் ரூ.1000000/–க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.2758 /2018/எச்2)**

**2)** கடலூர் மாவட்டத்தில் உள்ள சிதம்பரம் நகராட்சி 4.82 சதுர.கி.மீ பரப்பளவில் அமைந்துள்ளது. இங்கு தற்போது எடுக்கப்பட்ட தூய்மை இந்தியா இயக்கம் புள்ளிவிவரப்படி சுமார் 14,058 வீடுகளும், இதில் 56,232 எண்ணிக்கையிலான மக்கட்தொகையும் உள்ளது. இதிலிருந்து தனிநபர்க்கு நாள் ஒன்றுக்கு 300 கிராம் வீதம் தினசரி சுமார் 16.87 டன் அளவிலான திடக்கழிவுகள் உருவாகிறது. இதில் 8.44 டன் Wet Waste (மக்கும் திடக் கழிவு) மூலம் உரம் தயாரிப்பதற்கு மூன்று இடத்தில் நுண் உரம் தயாரிப்பு திட்டம் தொடங்கப்பட்டு, தற்போது அதில் ஓர் இடத்தில் உரம் தயாரித்தல் பணிநடைபெற்று வருகிறது. மேலும் 5 எண்ணிக்கையிலான குப்பைகள் உருவாகும் இடத்திலேயே உரம் தயாரிக்கும் கூடம் (On site composting) அமைக்கப்பட்டு வருகிறது. மேலும் மொத்தகழிவு உற்பத்தி என்ற வகையில் (BWG) 1 திருமணமண்டபம், 1 கோவில் மற்றும் ஐந்து பெரிய உணவகங்கள் மூலம் 0.70 M.T. ஈரக் கழிவுகளை கொண்டு இயற்கை உரம் தயாரிக்கப்பட்டுவருகிறது.

**தற்போதைய நிலையில் தினசரி உருவாகும் 16.87 டன் அளவிலான திடக்கழிவுகள் கீழ்கண்டவாறு கையாளப்பட்டு வருகிறது.**

- 50% - 8.44 டன் MCC மூலம் நுண் உரம் தயாரிக்கும் பணிக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. Bulk Waste Generater (BWG) மூலம் 0.70 டன் அளவிலான ஈரமான திடக்கழிவுகள் நுண் உரம் தயாரிக்கும் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

- 10%-1.69 டன் அளவிலான Saleable Waste புதன்கிழமைதோறும் விற்பனை செய்து அதற்கான பணப்பயன், துப்புரவுபணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

- 35% - 5.90 டன் அளவிலான Non-saleable Waste திடக்கழிவுகளை அரியலூர் பகுதியில் உள்ள அல்ட்ரா–டெக் சிமெண்ட் தனியார் நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு வருகிறது.

➢ 5% - 0.84 டன் அளவிலான பயனற்ற மண் துகள்கள் முறைப்படி பள்ளமான இடங்களில் சமன் செய்ய பயன்படுத்தப்பட்டு வருகிறது.

1. தினசரி உருவாகும் திடக்கழிவுகளிலிருந்து 8.44 மெ.டன் மக்கும் கழிவில் நகராட்சி அலுவலக பின்புறம் கிழக்கு பகுதியில் ஒரு இடத்தில் உள்ள பசுமை உரக்குடில்களில் உரம் தயாரிக்கும் கூடத்தில் தினசரி 1.50 டன் அளவிலான மக்கும் கழிவுகள் மூலம் நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. வாகீச நகர் மற்றும் ராஜலட்சுமி நகர் பகுதிகளில் பசுமை உரக்குடில்களில் நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் கூடம் அமைக்கும் பணி நடைபெற்றுவருகிறது.
2. தினசரி உருவாகும் மொத்த திடக்கழிவுகளில் உள்ள மக்காத திடக்கழிவுகளில் 10% அளவிலான வி ற்பனையாக கூடிய மற்றும் மறுசுழற்சிக்கு பயன்படக்கூடிய பிளாஸ்டிக் கழிவுகளை தினசரி சேகரித்து வைத்து வாரம் ஒருமுறை புதன்கிழமை தோறும் உள்ளூர் சந்தையில் தொடர்புடைய வியாபாரிகளிடம் வி ற்பனை செய்து பெறப்படும் தொகையினை துப்புரவு பணியாளர்களுக்கு பிரித்து வழங்கப்பட்டு வருகிறது.
3. தினசரி உருவாகும் மொத்த திடக்கழிவுகளான 16.87 டன்னிலிருந்து 35% பயனற்ற பிளாஸ்டிக் கழிவுகளை சுமார் 5.90 டன் அளவிலான கழிவினை அரியலூர் பகுதியில் உள்ள அல்ட்ரா–டெக் சிமெண்ட் தொழிற்சாலைக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

4. தினசரி உருவாகும் 16.87 டன் எடையுள்ள திடக்கழிவுகளிலிருந்து சுமார் 5% எதற்கும் பயனற்ற மண் துகள்கள் (Silt) சுமார் 0.84 டன் அளவு பிரித்தெடுக்கப்பட்டு பள்ளமான இடங்களை கண்டறிந்து அவற் றினை சமன் செய்வதற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.
5. நகராட்சி பகுதியில் சுமார் 7 எண்ணிக்கையிலான மொத்த திடக்கழிவு உற்பத்தியாளர்கள் (BWG) கண்டறியப்பட்டுள்ளனர். தற்போது இவர்களில் 7 நபர்கள் தாங்களாகவே தங்களது மக்கும் திடக்கழிவுகளின் மூலம் இயற்கை உரம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் மூலம் நாளொன்றுக்கு சுமார் 0.70 டன் அளவிலான ஈரக்கழிவுகள் கையாள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
6. திடக்கழிவு மேலாண்மை மற்றும் கையாளுதல் விதிகள் 2016–ன்படி இப்பகுதியில் உள்ள குடியிருப்புகளிலிருந்து திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி மற்றும் சனி ஆகிய 5 நாட்களில் மக்கும் திடக்கழிவுகள் மட்டுமே பெறப்படுகிறது. 6 எண்ணிகையிலான Battery Operated Vehicle (BOV) களின் மூலம் ஒரு BOV வாகனத்திற்கு 2 பணியாளர்களை ஈடுபடுத்தி தலா 400 வீடுகள் வீதம் மொத்தம் 2400 வீடுகளில் இருந்து மக்கும் திடக்கழிவுகள் பெறவும் 3 LCV வாகனத்திற்கு 4 பணியாளர்களை ஈடுபடுத்தி தலா 1200 வீடுகள் மொத்தம் 3600 வீடுகளில் இருந்து மக்காத திடக்கழிவுகள் பெறவும் நடவடிக்கையில் உள்ளது (ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது). மீதமுள்ள 8058 வீடுகளுக்கு கூடுதலாக BOV மற்றும் LCV வாகனம் வாங்குவதற்கு நடவடிக்கையில் உள்ளது. புதன் கிழமைதோறும் பொதுமக்களிடமிருந்து நெகிழி (மக்காத திடக்கழிவுகள்) மட்டுமே சேகரிக்கப்பட்டு, துப்புரவு பணியாளர்கள் மூலம் உள்ளூர் பழைய இரும்பு, கடைகளில் விற்பனை செய்யப்பட்டு அதன் மூலம் வரக்கூடிய பணப்பயனை, தொடர்புடைய துப்புரவுபணியாளர்களுக்கு பிரித்து வழங்கப்பட்டு வருகிறது.

7. தற்போதுள்ள திடக்கழிவு உரக்கிடங்கானது, சிதம்பரம் வட்டம் சி. தண்டேஸ்வரநல்லூர் கிராம சர்வே எண்.198/1, 6/2, 6/4 மற்றும் 37/2–ல் அமைந்துள்ளது. இந்த உரக்கிடங்கானது சுமார் 100 ஆண்டுகளுக்கு மேலாக பயன்பாட்டில் உள்ளது. இதில் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக இப்பகுதியில் உருவான திடக்கழிவுகள் அனைத்தும் சேகரிக்கப்பட்டு வருகிறது. இதனை

அப்புறப்படுத்த தூய்மை இந்தியா குழுமத்தின்மூலம் நிதி தொகை ரூ.273.50 இலட்சத்திற்கு பெறப்பட்டு Bio–mining திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்மூலம் தேங்கியுள்ள கழிவுகளை பிரித்து அப்புறப்படுத்தி நிலங்களை கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

எனவே இந்நகராட்சி பகுதியில் உருவாகும் திடக்கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கு ஏதுவாக அனைத்து கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட்ட காரணத்தினால் திடக்கழிவற்ற பூஜ்ய நிலையிலான திடக்கழிவு மேலாண்மையினை பின்பற்றி 01.10.2018 முதல் குப்பை கிடங்கற்ற நகரமாக சிதம்பரம் நகராட்சியை மாற்ற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொண்டு செயலாக்கத்தில் உள்ளதால், இந்நிலையினை பின்வரும் அலுவலர்களான துப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் நகராட்சி பொறியாளர் அறிந்து செயல்பட ஏதுவாக அரசிதழில் வெளியிட்டு வெளிப்படையான திடக்கழிவு மேலாண்மை மற்றும் கையாளுதல் முறையினை அறிவிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க. எண்.1782/2018/H1

**3)** அரசாணை எண்.137 சுற்றுச்சூழல் மற்றும் வனத்(வனம்–5) துறை நாள் 09.11.2017–ன்படி, சிதம்பரம் நகராட்சியில் Tamil Nadu Bio-diversity Management Committee எனப்படும் தமிழ்நாடு பலவித உயிரியியல் இனங்கள் பாதுகாக்கும் மேலாண்மைக்குழு அமைக்கவும், அரசு வழிகாட்டுதல்படி செயல்படவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தலைவர்**
தனி அலுவலர்/ நகர்மன்ற தலைவர், சிதம்பரம் நகராட்சி.

**உறுப்பினர்கள்**

1. திருமதி. அகிலா (தனி), ஆரணியம்மன் கோயில் தெரு, சிதம்பரம்.
2. திருமதி. பிரேமலதா (தனி), சிவசண்முகம் தெரு, சிதம்பரம்.
3. திருமதி. மீனா குமாரி, கொத்தங்குடித் தெரு, சிதம்பரம்.
4. திருமதி. சித்ரா, கொத்தங்குடித் தெரு, சிதம்பரம்.
5. திரு. மணிகண்டன், பழைய புவனகிரி ரோடு, சிதம்பரம்.
6. திரு. வீராசாமி, ஆரணியம்மன் கோயில் தெரு, சிதம்பரம்.

**நகராட்சி மூலம் அரசு துறை அலுவலர்கள் மற்றும் கல்வியாளர்கள் சிறப்பு அழைப்பாளர்களாக நியமனம் செய்யப்பட்டவர்கள்.**

1) மாவட்ட வன அலுவலர், கடலூர் வனக்கோட்டம், கடலூர் – 607 001.
2) நகராட்சி ஆணையாளர், சிதம்பரம் நகராட்சி, சிதம்பரம் – 608 001.
3) உதவி இயக்குநர், மீன்வளத் துறை, 215–ஏ, பூதகேணி, பள்ளிப்படை சிதம்பரம் – 608 001.
4) வட்டார வளர்ச்சி அலுவலர், சிதம்பரம் வட்டாரம், சிதம்பரம் – 608 001.
5) முனைவர் மற்றும் தலைவர், பொறியியல் மற்றும் தொழில்நுட்ப புலம், அண்ணாமலை பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர் – 608 002.
6) உதவி தொடக்கக்கல்வி அலுவலர், தொடக்கக்கல்வி அலுவலகம், குமராட்சி சரகம், குமராட்சி.

**சிதம்பரம் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக இக்குழுவில் நியமனம் செய்யப்பட்டவர்கள்.**

**பலவித உயரியியல் இனங்கள் பாதுகாக்கும் மேலாண்மைக்குழுவின் விதிகள் மற்றும் பொறுப்புக்கள் Rule and Responsibility of Biodiversity Management Committee விபரம் :**

1) பலவித உயரியியல் இனங்கள் வளர்க்கும் பொதுமக்கள் பதிவேடு தயார் செய்தல்.
2) வனக் கோட்டத்திற்கு அப்பால் பலவித உயிரியியல் இனங்கள் மறுவாழ்வு குறிப்புகள் மற்றும் தேவையான முடிவுகள்.
3) வனக்கோட்டத்திற்கு அப்பால் பலவித உயிரியியல் இனங்களின் உள்ளூர் மறுசீரமைப்பு.

4) அறிவுசார் சொத்து உரிமைகள், பாரம்பரிய அறிவு மற்றும் உள்ளூர் பல்லுயிர் விவகாரம் ஆகியவைகள் குறித்து தேசிய பல்லுயிர் அதிகாரசபை மற்றும் குழுவிற்கு சரியான கருத்துக்கள் அளித்தல்.
5) பலவித உயிரியியல் புராதன இடங்கள், புராதன மரங்கள், விலங்குகள், நுண்ணுயிரிகள், புனித தோப்புகள் மற்றும் புனித நீர்நிலைகள் சேர்த்து மேலாண்மை செய்தல்.
6) உயிரியியல் வளங்கள் மற்றும் வர்த்தக நோக்கத்திற்குரிய பாரம்பரிய அறிவுடன் ஒழுங்குமறை கட்டுப்பாடுகள் விதித்தல்
7) உயிரியியல் வளங்களை வணிக ரீதியாக பயன்படுத்துதல் தேவையான சட்டங்கள் அமைத்து அவற்றை பகிருதல்.
8) பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த தாவரங்கள் மற்றும் விலங்கினங்களை பாராம்பரிய வகையில் பாதுகாத்தல்.
9) பலவித உயிரியியல் இனங்கள் கல்வி மற்றும் விழிப்புணர்வு கூடங்கள் அமைத்தல்.
10) உயிர் கலாச்சார வழிமுறைகளை உருவாக்கி செயல்முறை ஆவணங்கள் தயாரித்து வளர்ச்சிக்கு உதவுதல்.
11) உயிர் ஆதாரங்களின் நிலையான பயன்பாட்டிற்கு உறுதியளித்தல்.

மேற்கண்ட விதிகளுக்குட்பட்டு ஆண்டிற்கு நான்கு முறையும் மூன்று மாதங்களுக்கு ஒருமுறையும் கூடி முடிவுசெய்யப்பட வேண்டும். தலைவர் குழுக் கூட்டத்திற்கு வர இயலவில்லையெனில் உறுப்பினர்களில், ஒருவர் தலைமையேற்று நடத்தப்பட வேண்டும். ஒவ்வொரு கூட்டம் நடத்தவும் போதுமான உறுப்பினர்கள் வருகை இருக்கப்பட வேண்டும். பலவித உயிரியியல் இனங்கள் பாதுகாக்கும் மேலாண்மைக்குழுவின் கூட்ட நடவடிக்கைகள் விபரத்தினை நோடல் அதிகாரிக்கு உடன் தெரிவிக்கப்படவேண்டும். இவ்வாறாக மேற்படி குழு செயல்படுவதற்கு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.2169 /2018/இ1)

**4)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் பணியினை செய்ய 13.07.2018 அன்று **குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2018–19**–ன்கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | **குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2018–19** | | | | |
| 1 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 5, வடக்கு வடுகத் தெருவில் பழுதடைந்த 90 எம்.எம் விநியோக குழாய்க்கு பதிலாக புதியதாக மாற்றும் பணி. | **திரு.என். சபாநாயகம்,** ஒப்பந்ததாரர், சிதம்பரம். | 1,30,000/– | மதிப்பீட்டினை விட 0.09 % குறைவு | ––– |
| | | **திருமதி.ஆர்.கோமதி,** ஒப்பந்ததாரர், சிதம்பரம். | | ––– | மதிப்பீட்டினை விட 0.31 % அதிகம் |

**அலுவலகக் குறிப்பு :** 1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி மதிப்பீட்டிடைவிட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**5)** சிதம்பரம் நகரம் வார்டு எண்.2, பிளாக் எண்.6, நகர அளவு எண்.544, வார்டு எண்.2, பிளாக் எண்.2, நகர அளவு எண்.202ல் அண்ணா தெரு விரிவாக்கம் (முத்து கிருஷ்ணன் நகர் மனைப் பிரிவு) உள்ள பொது மக்கள் பல வருடங்களாக மேற்படி சாலை பொது மக்கள் பயன்படுத்தி வருவதாகவும் இச்சாலையை நகராட்சி ஏற்றுக்கொண்டு பொது சாலையை தானமாக நகராட்சிக்கு ஒப்படைக்க தெரிவித்துள்ளார். மேற்படி மனைப்பரிவு உதவி இயக்குநர் விழுப்புரம் மண்டலம் (நகர் ஊரமைப்பு துறை) அவர்களால் Frame Work செய்யப்பட்டுள்ளது. மேலும் இச்சாலையை அண்ணா தெருவோடு இணைக்க ஏதுவாக சுந்தராம்மாள் என்பவரிடமிருந்து 790 சதுரஅடி கிரையம் பெற்றுள்ளார்கள். இந்த இடத்தையும் சேர்த்து நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்க சம்பத்தித்துள்ளார்கள்

1 வது சாலை 20 அடி X 35 அடி

2 வது சாலை 24 அடி X 350 அடி

3 வது சாலை 24 அடி X 84 அடி

4 வது சாலை 24 அடி X 263 அடி

எனவே மேற்படி சாலை பொது சாலையாக பொது மக்களால் பல வருடங்களாக பயன்படுத்தி வருவதால் இச்சாலையினை நகராட்சி ஏற்றுகொள்ள நகர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

**அ.கு**

பொது மக்களால் இச்சாலை பயன்படுத்திவருவதால் தானமாக தான பத்திரம் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

ந.க.எண். 1966/2018/எச்1

**6)** இந்நகராட்சியில் பொது நிதி 2018–19–ன்கீழ், ரூ.32.94 லட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்ட 1 சிப்பம் கொண்ட 2 பணிகளான பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் (Battery operated Vehicle) 6 எண்கள் மற்றும் டிப்பர் ஆட்டோ (Tipper Auto) 3 எண்கள் சிதம்பரம் நகராட்சிக்கு விநியோகம் செய்யும் பணிக்குரிய **25.07.2018–ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை** கீழ்காணும் நாளிதழ்களில் 27.07.2018 அன்று விளம்பரம் செய்யப்பட்டமைக்கு, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், செய்தி மக்கள் தொடர்பு துறை, கடலூர் மாவட்டம், கடலூர்–607 001 அவர்களின் கடித எண்.106/ஒப்பந்தப்புள்ளி/விளம்பரம்/2018, நாள் .07.2018–ன்படி) வரப்பெற்ற பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **நாளிதழ் விபரம்** | **பட்டியல் எண்.** | **விளம்பர நாள்** | **தொகை** |
|---|---|---|---|---|
| 1 | தினசூரியன் மதுரை | 1424 நாள் 27.07.2018 | 27.07.2018 | ரூ.13,920/– |
| | | | CGST 2.5 % | ரூ. 348/– |
| | | | SGST 2.5 % | ரூ. 348/– |
| | | **மொத்தம்** | | **ரூ.14,616/–** |
| **2** | **Southern Mail Cuddalore (Dina Kural Cuddalore-2)** | **65 Dt.27.07.2018** | **27.07.2018** | **ரூ.28800/–** |

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.4996/2014/இ1)

**7)** சிதம்பரம் நகராட்சி வார்டு எண்.8, வடக்கு சன்னதி தெரு, கதவு எண்.B என்ற ராயல் பிளாசா லாட்ஜின் உரிமையாளர் அவர்கள், நகராட்சிக்கு அனுப்பிவைக்கப்பட்ட 05.02.2018–ந் தேதிய கடிதத்தில் தனது லாட்ஜ் குடிநீர் இணைப்பு எண்.092/3687–யை 01.04.2017 முதல் நிரந்தர துண்டிப்பு செய்யக் கோரியுள்ளார்.

நகராட்சி மின் கண்காணிப்பாளர் மேற்படி வீட்டினை கள ஆய்வு செய்து, நகராட்சி மூலம் 01.04.2017–ல் குடிநீர் இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டுள்ளது. ஆனால், நகராட்சி கேட்பு 01.04.2017–ல்

தொடர்ந்து மனுதாரருக்கு வரப்பெற்றுள்ளது எனவும், மனுதாரர் குடிநீர் இணைப்பை, துண்டிப்பு செய்ய தனது **22.03.2018**–ந் தேதிய குறிப்பின்மூலம் வருவாய் பிரிவிற்கு பரிந்துரை செய்துள்ளார்.

நகராட்சி வருவாய் ஆய்வர் அவர்கள் மேற்படி வீட்டிற்கு நேரடி கள ஆய்வு செய்து, குடிநீர் இணைப்பு இல்லை என தனது **19.04.2018**–ந் தேதிய குறிப்பின்மூலம் தெரிவித்துள்ளார்.

மேற்படி மனுதாரர் கோரியதற்கிணங்கவும், நகராட்சி மின் கண்காணிப்பாளர் மற்றும் வருவாய் ஆய்வர் குறிப்பிற்கிணங்கவும், மனுதாரர் **01.04.2017**–ந்தேதி முதல் ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று, மனுதாரர் வீட்டு குடிநீர் இணைப்பு எண்.**092/3687**–யை, நகராட்சி வருவாய் கேட்பு பதிவிலிருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.318/2018/இ2)

**8)** சிதம்பரம் நகராட்சி வார்டு எண்.**18**, தெற்கு ரத வீதி, கதவு எண்.**8** என்ற வீட்டின் உரிமையாளர் திரு வெங்கடேச செட்டியார் அவர்கள், நகராட்சிக்கு அனுப்பிவைக்கப்பட்ட **20.03.2018**–ந் தேதிய கடிதத்தில் தனது வீட்டின் குடிநீர் இணைப்பு எண்.**092/10633**–யை **01.04.2018** முதல் நிரந்தர துண்டிப்பு செய்யக் கோரியுள்ளார்.

நகராட்சி மின் கண்காணிப்பாளர் மேற்படி வீட்டினை கள ஆய்வு செய்து, நகராட்சிமூலம் **01.04.2018**–ல் குடிநீர் இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டுள்ளது. ஆனால், நகராட்சி கேட்பு **01.04.2018**–ல் தொடர்ந்து மனுதாரருக்கு வரப்பெற்றுள்ளது எனவும், மனுதாரர் குடிநீர் இணைப்பை, துண்டிப்பு செய்ய தனது **22.03.2018**–ந் தேதிய குறிப்பின்மூலம் வருவாய் பிரிவிற்கு பரிந்துரை செய்துள்ளார்.

நகராட்சி வருவாய் உதவியாளர் அவர்கள் மேற்படி வீட்டிற்கு நேரடி கள ஆய்வு செய்து, குடிநீர் இணைப்பு இல்லை என தனது **10.04.2018**–ந் தேதிய குறிப்பின்மூலம் தெரிவித்துள்ளார்.

மேற்படி மனுதாரர் கோரியதற்கிணங்கவும், நகராட்சி மின் கண்காணிப்பாளர் மற்றும் வருவாய் ஆய்வர் குறிப்பிற்கிணங்கவும், மனுதாரர் **01.04.2018**–ந்தேதி முதல் ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று, மனுதாரர் வீட்டு குடிநீர் இணைப்பு எண்.**092/10633**–யை, நகராட்சி வருவாய் கேட்பு பதிவிலிருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.856/2018/இ2)

**9)** சிதம்பரம் நகராட்சி வார்டு எண்.**18**, தெற்கு ரத வீதி, கதவு எண்.**25** என்ற வீட்டின் உரிமையாளர் திரு ஆ. ரவீந்திரன் அவர்கள், நகராட்சிக்கு அனுப்பிவைக்கப்பட்ட **05.04.2018**–ந் தேதிய கடிதத்தில் தனது வீட்டிற்கு குடிநீர் இணைப்பு எண்.**092/10645**–யை நிரந்தர துண்டிப்பு செய்யக் கோரியுள்ளார்.

நகராட்சி மின் கண்காணிப்பாளர் மேற்படி வீட்டினை கள ஆய்வு செய்து, நகராட்சிமூலம் **11.02.2013**–ல் குடிநீர் இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் நகராட்சி செலுத்துசீட்டு எண்.**1206497**, நாள் **12.02.2013**–ன்படி ரூ.**100/–** குடிநீர் இணைப்பு துண்டிப்பு கட்டணம் செலுத்தியுள்ளார். ஆனால், நகராட்சி கேட்பு **11.02.2013**–ல் தொடர்ந்து மனுதாரருக்கு வரப்பெற்றுள்ளது எனவும், மனுதாரர் துண்டிப்பு கட்டணம் செலுத்தியுள்ளபடியால், குடிநீர் இணைப்பை, துண்டிப்பு செய்ய தனது **07.06.2018**–ந் தேதிய குறிப்பின்மூலம் வருவாய் பிரிவிற்கு பரிந்துரை செய்துள்ளார்.

நகராட்சி வருவாய் ஆய்வர் அவர்கள் மேற்படி வீட்டிற்கு நேரடி கள ஆய்வு செய்து, குடிநீர் இணைப்பு இல்லை என தனது **21.06.2018**–ந் தேதிய குறிப்பின்மூலம் தெரிவித்துள்ளார்.

மேற்படி மனுதாரர் கோரியதற்கிணங்கவும், நகராட்சி மின் கண்காணிப்பாளர் மற்றும் வருவாய் ஆய்வர் குறிப்பிற்கிணங்கவும், மனுதாரர் **12.02.2013–**ந்தேதிய குடிநீர் இணைப்பு துண்டிப்பு கட்டணம் செலுத்தியுள்ளதாலும், ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று, மனுதாரர் வீட்டு குடிநீர் இணைப்பு எண்.**092/10645–**யை, நகராட்சி வருவாய் கேட்பு பதிவிலிருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1042/2018/இ2)

**10)** சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட 15–A, செங்கட்டான் தெருவில் திரு J. செந்தில்குமார் என்பவரால் கட்டிட விண்ணப்ப எண்.21/2017–ன்படி கட்டிட அனுமதி கோரி விண்ணபத்துள்ளார். கட்டிட அனுமதி எண்.19/2017 நாள் 28.03.2017–ன்படி கட்டிட அனுமதி இந்நகராட்சியால் வழங்கப்பட்டது.

இந்நிலையில், மனுதாரர் தனது 08.01.2018 தேதிய கடிதத்தில், புதிய வீடு கட்டுமானத்தின்போது, நகராட்சிக்கு மழைநீர் சேகரிப்பு வைப்புத் தொகை ரூ.5,000/–யை 20.03.2017–ல் செலுத்தியுள்ளதாகவும், த ற்போது வீடு கட்டி முடித்து பயன்பாட்டில் உள்ளதாகவும், கட்டுமான பணிகளையும் முடித்துள்ளதாகவும் தெரிவித்து, மழைநீர் சேகரிப்பு வைப்புத் தொகைக்கு செலுத்திய தொகையினை திரும்ப வழங்கிட கோரியுள்ளார்.

நகரமைப்பு ஆய்வாளர் மேற்படி இடம் பார்வையிடப்பட்டதில், மழைநீர் சேகரிப்பு அமைப்பு கட்டி முடித்துள்ளார் எனவும், கோப்பு எண்.2430/2013/எப்.1, நாள் 23.07.2013–ல்அன்றைய அலுவலகக் குறிப்பிட்டுள்ளதற்கிணங்க, மழைநீர் சேகரிப்பு வைப்புத் தொகையினை கட்டிட உரிமையாளருக்கு வழங்கிட தனது குறிப்பின் மூலம் பரிந்துரை செய்துள்ளார்.

ஆகவே, மேற்கண்ட கட்டிட உரிமையாளர் திரு J. செந்தில்குமார் அவர்களுக்கு மழைநீர் சேகரிப்பு வைப்பு தொகை ரூ.5,000/–(ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்)–யை திரும்ப வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.51/2018/எப்1)

**11)** சிதம்பரம் நகராட்சி 4.82 ச.கிமீ. பரப்பளவுள்ள 33 வார்டுகள் கொண்ட தேர்வு நிலை நகராட்சியாகும், 2011–ம் ஆண்டு முதல் மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கட்தொகை 62,153 ஆகும். இந்நகராட்சிக்கு சொந்தமான நீராதாரங்கள் மூலம் 4.92 லட்சம் லிட்டர் குடிநீர் தினசரி பெறப்பட்டு நபரொன்றுக்கு நாளொன்றுக்கு 79 (LPCD) லிட்டர் என்ற அளவில் தினசரி ஒரு முறை விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் இந்த குடிநீர் விநியோக திட்டத்தின் கீழ் வழங்கப்படும் குடிநீர் நகரின் அனைத்து பகுதிகளுக்கும் சீரான அழுத்தத்துடன் விநியோகிக்க இயலாத நிலை உள்ளதால் District Metered Area (DMA) வகைப்படி நகரை பல்வேறு குடிநீர் மண்டலங்களாக பிரித்து, ஒவ்வொரு மண்டலத்துக்கும் தனித்தனியாக குடிநீர் வழங்கத்தக்க வகையான ஏற்பாடுகளுடன் நகராட்சியால் தயாரிக்கப்பட்ட Ideal Zonation Map மற்றும் அதனை செயல்படுத்த தேவைப்படும் உட்கட்டமைப்புகள், மதிப்பீடு உள்ளிட்டவைகளை ஆய்வு செய்து விரிவான திட்ட அறிக்கை ( Detailed Project Report) தயார் செய்ய தனியார் கலந்தாலோசகர் (Consultant) நியமனம் செய்யவும் இதற்கான செலவினத்தை Project Development Grand Fund (PDGF) அல்லது Project Preparatory Fund (PPF) நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

நகராட்சி பகுதிகளிலுள்ள பொதுமக்கள்அனைவரும் சீரான அழுத்தத்துடன குடிநீர் விநியோகம் செய்யத்தக்க வகையிலான இப்பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் மூலமாக தனியார் கலந்தாய்வர் (Consultancy) நியமனம் செய்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

**12)** சிதம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மானா தெரு OHT – லிருந்து குடிநீர் விநியோகம் நடைபெறும் பகுதியில் கொத்தங்குடி தெரு வடக்கு மற்றும் நகராட்சி பள்ளி எதிர்புறம், குமரன் தெரு பகுதியில் பாதாள சாக்கடை திட்ட நிர்மான பணியின்போது 90 எம்.எம். குழாய் பல இடங்களில் உடைப்பு ஏற்பட்டும், Manhole Cover அமைக்கப்பட்ட சில இடங்களில் நேராக அமைக்கப்பட்டிருந்த விநியோக குழாய் பல வலைவுகளுடன் அமைக்கப்பட்டு அப்பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் தடைபட்டுள்ளன. இதனை சரிசெய்ய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பாதாள சாக்கடை திட்ட ஒப்பந்ததாரர் மூலம் பல இடங்களில் பணிபார்க்கப்பட்டும் குறைபாடு நீங்கவில்லை. எனவே தடையின்றி நீர் விநியோகம் நடைபெற அத்தியாவசியமாக 225 மீட்டர் நீளத்திற்கு புதிதாக 90 எம்.எம். பி.வி.சி குழாய் அமைக்கப்பட வேண்டிய பணிக்கும், இப்பணிக்கான மதிப்பீடு செலவினம் ரூ. 1,40,000/–க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2018–19–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**13)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் பணியினை செய்ய 18.07.2018 அன்று **பொது நிதி 2018–19–** கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | பொது நிதி 2018–19 | | | | |
| 1 | சிதம்பரம் நகராட்சி புதிய அலுவலகத்தின் பின்புறம் லாரி நிறுத்தும் இடத்திற்கு அருகில் உள்ள காலியிடத்தில், குப்பைகள் பிரித்து உரம் தயாரிக்கும் கூடம் (Micro Compost Centre) ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள இடத்தின் மேற்கு பக்கத்தில் மற்றும் ஒரு குப்பைகள் பிரித்து உரம் தயாரிக்கும் கூடம் (Micro compost center) அமைக்கும் பணி | **திரு.கே.ரஜினிகாந்த்,** ஒப்பந்ததாரர், சி.முட்லூர். | 18,00,000/– | --- | மதிப்பீட்டினை விட 4.94 % அதிகம் |
| | | **திரு.எஸ்.சண்முக சுந்தரம்** ஒப்பந்ததாரர், சிதம்பரம். | | --- | மதிப்பீட்டினை விட 5.83 % அதிகம் |

**அலுவலகக் குறிப்பு :** 1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.6–ல் கண்டுள்ளபடி மதிப்பீட்டிடைவிட 4.94 % அதிகத்தில் குறைவாக கொடுத்துள்ள **திரு.கே.ரஜினிகாந்த்,** ஒப்பந்ததாரர், சி.முட்லூர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

2. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**14)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் பணியினை செய்ய 26.07.2018 அன்று **குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2018–19**–ன்கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2018–19 | | | | |
| 1 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட மானா தெரு OHT கொத்தங்குடி மற்றும் குமரன் தெரு விநியோக குழாய் அடைப்பு மற்றும் உடைப்புகள் பழுது நீக்கும் பணி. | **திருமதி.கே.முத்துலட்சுமி,** ஒப்பந்ததாரர், பணங்காடு. | 1,40,000/– | மதிப்பீட்டினை விட 0.22 % குறைவு | --- |
| | | **திரு.எஸ்.கிருஷ்ண மூர்த்தி,** ஒப்பந்ததாரர், நாஞ்சலூர். | | --- | மதிப்பீட்டினை விட 2.09 % அதிகம் |

**அலுவலகக் குறிப்பு :** 1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி மதிப்பீட்டிடைவிட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**15)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் பணியினை செய்ய 26.07.2018 அன்று **பொது நிதி 2018–19**–ன்கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | பொது நிதி 2018–19 | | | | |
| 1 | நகர பகுதிகளில் சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் குப்பைகளை மூட்டைகளாக கட்டும் இயந்திரம் (Hydralic rag Bailing Machine) சிதம்பரம் நகராட்சிக்கு விநியோகம் செய்யும் பணி | M/s.TOTAL ENVIRONMENT SOLUTIONS, 7 & 8a, Sidco Industrial Estate, Opp to. Eedissia Office, Chennimalai Road, Erode - 638 001. | 4,95,000/– | மதிப்பீட்டினை விட 0.02 % குறைவு | --- |
| | | M/s. CARVIN DINKUM ENGG (P) LTD., No. 48, 49 Industrial Estate, Opp. Indl Feeders, Inside NSK Compund, Ambattur, Chennai - 600 058 | | --- | மதிப்பீட்டினை விட 3.03 % அதிகம் |

**அலுவலகக் குறிப்பு :** 1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி மதிப்பீட்டிடைவிட குறைவாக கொடுத்துள்ள நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

2) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**16)** சிதம்பரம் நகராட்சி குடிநீர் வழங்கல் மற்றும் விநியோக பணியில் குடிநீர் விநியோக குழாய் 78 கி.மீ., கைப்பம்புகள் 156 எண்கள், பொது குழாய் 226 எண்கள் மற்றும் ஸ்கவர் வால்வுகள் மூலம் குடிநீர் விநியோகம்

செய்யப்பட்டு வருகிறது. சிதம்பரம் நகரில் நடைபெற்றுவரும் பாதாள சாக்கடை திட்ட நிர்மான பணிகளின்போதும், நீரின் பின்னழுத்தம் காரணமாகவும் அவ்வப்போது குடிநீர் குழாய்களில் உடைப்பு ஏ ற்பட்டு, குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டு வருகிறது. இதனை உடனுக்குடன் சரிசெய்யும் பொருட்டு, கீழ்க்கண்ட விபரப்படி மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வேண்டியும், **குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2018–19–**ன்கீழ் பணியினை மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **பணிகளின் விபரம்** | **மதிப்பீட்டு தொகை (ரூபாய் இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1 | **வார்டு எண்.1 முதல் 11 வரை உள்ள** பகுதிகளில் குடிநீர் குழாய் விநியோக குழாய்கள், கைப்பம்புகள் பொதுக்குழாய்கள் மற்றும் ஸ்கவர் வால்வுகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை அகற்றும் பணி | 5.00 |
| 2 | **வார்டு எண்.12 முதல் 22 வரை உள்ள** பகுதிகளில் குடிநீர் குழாய் விநியோக குழாய்கள், கைப்பம்புகள் பொதுக்குழாய்கள் மற்றும் ஸ்கவர் வால்வுகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை அகற்றும் பணி | 5.00 |
| 3 | **வார்டு எண்.23 முதல் 33 வரை உள்ள** பகுதிகளில் குடிநீர் குழாய் விநியோக குழாய்கள், கைப்பம்புகள் பொதுக்குழாய்கள் மற்றும் ஸ்கவர் வால்வுகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை அகற்றும் பணி | 5.00 |
| | ஆக மொத்தம் | **15.00 இலட்சம்** |

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

இடம்: சிதம்பரம்
நாள்: 10.08.2018

தனி அலுவலர்,
சிதம்பரம் நகராட்சி